Formular drucken

**Bildungsdirektion Kanton Zürich**
Volksschulamt

**Verein Zürcher Lehrpersonen DaZ**

# இரண்டாவது பாஷையாக டொச்: பெற்றோருக்கான தகவல்கள்

**அன்பான பெற்றோருக்கு**

**டொச்சை நன்றாகத் தெரிந்திருப்பது முக்கியம், அதன்மூலம் ஒரு பிள்ளை பாடசாலையில் வெற்றிகரமாகப் படிக்கலாம். டொச் முதல்ப்பாஷையாக இல்லாத பிள்ளைகளுக்கு தேவைக்கேற்ப ஒரு உதவியாக மேலதிக வகுப்பு இரண்டாவது பாஷையான டொச்சிற்கு (DaZ )கிடைக்கும்.**

**மேலும் நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன், உங்களுடைய பிள்ளைக்கு ………………………………………….. இரண்டாவது பாஷையான டொச்சிற்கு வகுப்பு கிடைக்கும். குறிக்கோள் என்னவென்றால், உங்களுடைய பிள்ளை உயர் ஜேர்மன் பழகினால், அப்போ அதற்கு பாடசாலையில் படிப்பிற்கும் போது பின்பற்ற முடியும்.**

**நான் உங்களை விரைவில் ஒருமுறை ஒரு பேச்சுவார்த்தைக்கு அழைக்க விரும்புகிறேன், உங்களுடன் உங்களுடைய பிள்ளை உயர் ஜேர்மன் பேசுவதை முன்னேற்றுவதைப்பற்றி பேசுவதற்கு. நீங்கள் ஒரு பார்வையிடும் காலைப்பொழுதில் மேலும் இரண்டாவது பாஷையான டொச் வகுப்பையும் வந்து பார்வையிட்டால், நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். ஆனால் அதோடு நீங்கள் வேறு எந்த முன்னேற்பாடு செய்யப்பட்ட நேரத்திலும் வருகை தரலாம்.**

**நான் உங்களை உங்களுடைய பிள்ளை டொச் பழகுவதற்கு உற்சாகத்துடன் உதவுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன், உதாரணமாக நீங்கள் உங்களுடைய பிள்ளையை உற்சாகப்படுத்த வேண்டும் அல்லது அதற்காகக் கவனமெடுக்க வேண்டும், உங்களுடைய பிள்ளை பள்ளிக்கூடத்தில் படிப்பதோடு டொச் பேசுகின்ற பிள்ளைகளுடன் நிறைய தொடர்பு வைத்திருக்குமாறும் மேலும் டொச் புத்தகங்கள் வாசிக்குமாறும்**

**பார்க்க வேண்டும்.**

**அதேமாதிரி முக்கியம்: நீங்கள் உங்களுடைய பிள்ளையுடன் உங்களுடைய பாஷையை விருத்தி செய்ய வேண்டும். நீங்கள் அதை பாடசாலையில் நடந்ததை உங்களுடைய பாஷையில் சொல்ல விடவும், அதோடு நீங்கள் அதற்கு ஒரு சொல்லு தெரியாவிட்டால் உதவவும். இரண்டு பாஷைகளுடன் வளர்வது ஒரு நல்ல வாய்ப்பு, உங்களுடைய பிள்ளைக்கு அது கிடைத்திருக்கிறது.**

**உங்களுடைய கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.**

**நல் வாழ்துக்களுடன்**

**இரண்டாவது பாஷையான டொச்சிற்கான ஆசிரியை/**
**இரண்டாவது பாஷையான டொச்சிற்பான ஆசிரியர்:**

……………………………………………………………………………………………
**பெயர், பாடசாலை, தொலைபேசி**